30.12.2016

தினத் தந்தி DAILY THANTHI

வெல்க தமிழ்

**உடலுக்கு ஏற்ற ஊதா ரொட்டி**



சிங்கப்பூரைச் சேர்ந்தவர் , ஸோவ் வெய்பியாவோ . இவர் ஒரு உணவு விஞ்ஞானி . விதவிதமான உணவு வகைகளை புதிதாகசமைப்பதுடன், உடல் ஆரோக்கியத்தை மேம் படுத்தும் உணவு வகைகள் தொடர்பான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறார் இவரது ஆராய்ச்சி ., ஊதா நிற ரொட்டிகளை உருவாக்கி இருக்கிறது . திராட்சை, ப்ளூபெரி, ஸ்டார்ச் நீக்கப்பட்ட கருப்பு அரிசிகளைப் பயன்படுத்தி , உருவாக்கப்படும் இந்த ஊதா ரொட்டிகள் , சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவு . ஊதா ரொட்டிகள் ஜீரணமாக அதிக நேரம் எடுத்துக்கொள்வதால், கலோரிகள் உடல் இயக்கத்திற்கான சக்தியாக மாறிவிடுகிறது இதனால் உடல் பருமன் ., உயர் ரத்த அழுத்தம் போன்ற வியாதிகளுக்கு தீர்வாக அமை வதுடன் , புற்றுநோய் பாதிப்பிலிருந்தும் காப்பாற்றுகிறது இதுவரை ஆராய்ச்சி நிலையில் இருந்த ஊதா . ரொட்டிகள், தற்போது இந்தியாவிலும் விற்பனைக்கு வந்துவிட்டன.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை5 காசுகள் உயர்வு 384 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்வடைந்து 384 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

<u>முட்டை விலை உயர்வு</u>

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 379 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 384 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு: – சென்னை–390, ஐதராபாத்–369, விஜயவாடா, தனுகு–387, பார்வாலா–386, மும்பை–410, மைசூரு–375, பெங்களூரு–380, கொல்கத்தா–417, டெல்லி–405.

<u>கறிக்கோழி விலை</u>

கறிக்கோழி விலை கிலோ ரூ. 75–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அதன் விலையை கிலோவுக்கு ரூ. 3 உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி கறிக்கோழி கிலோ விலை ரூ.78 ஆக உயர்ந்து உள்ளது.

முட்டைக்கோழி விலை கிலோ ரூ. 56–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

காரணம் என்ன?

வடமாநிலங்களில் கடும் குளிர் நிலவி வருவதும் , முட்டையின் நுகர்வு தன்மை அதிகரித்து வருவதும் முட்டை உயர்வுக்கு முக்கிய காரணம் ஆகும். மேலும் பிறமண்டலங்களில் விலை உயர்வுக்கு ஏற்ப நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டு உள்ளது.

இதற்கிடையில் புத்தாண்டு கொண்டாட்டம் நடைபெற உள்ளதை தொடர்ந்து கேக் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதையொட்டியும் முட்டை விலை உயர்ந்து உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**நாமக்கல்லில் ரூ.80 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



நாமக்கல்,

நாமக்கல்லில் நேற்று 4 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.80 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்தி ஏலம்

நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல் , எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 4 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.80 லட்சத்துக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ. 80 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 ஆயிரத்து 189 முதல் ரூ.5 ஆயிரத்து 912 வரையும், டி.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6 ஆயிரத்து 124 முதல் ரூ. 6 ஆயிரத்து 839 வரையிலும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 ஆயிரத்து 942 முதல் ரூ.6 ஆயிரத்து 300 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை , அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம், கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

வழக்கமாக இங்கு பருத்தியை விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகளுக்கு பணம் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். ஆனால் தற்போது நிலவி வரும் பணத்தட்டு பிரச்சினை காரணமாக நேற்றும் விவசாயிகளுக்கு பணத்திற்கு பதிலாக காசோலை வழங்கப்பட்டது.

**ஊரக வளர்ச்சி முகமை சார்பில் நடக்கும் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு**



தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை சார்பில் நடந்து வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் ஆய்வு

தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை சார்பில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் தேனி , போடி, சின்னமனூர், உத்தமபாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடந்து வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊஞ்சாம்பட்டியில் , மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 10 லட்சம் மதிப்பில் பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்று நாற்றாங்கால் பண்ணை , கொடுவிலார்பட்டி ஊராட்சியில் ரூ. 10 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிமார் ஓடை முதல் காவல்கரடு வரத்து வாய்கால் தூர்வாரும் பணி , போடிநாயக்கனூர் ஒன்றியத்திற்குட்பட்ட கூழையனூர் ஊராட்சியில் ரூ. 5 கோடியே 34 லட்சம் மதிப்பில் கோட்டூர்-கூழையனூர் இடையே முல்லைப்பெரியாற்றில் கட்டடப்பட்டுள்ள பாலம் ஆகியவற்றை கலெக்டர் பார்வையிட்டார்.

ஊராட்சி சேவை மையம்

சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் , வேப்பம்பட்டி ஊராட்சியில் ரூ. 17 லட்சம் மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையம் , இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் ரூ. 1 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் கூடுதல் வீடுகள் கட்டும் பணி , அழகாபுரி ஊராட்சியில் ரூ. 17 லட்சம் மதிப்பில் விசுவநாதபுரம் முதல் ஓடைபட்டி , ஆணைமலையான்பட்டி இணைப்புச்சாலை வரை மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி , ரூ.30 லட்சம் மதிப்பில் கட்டடப்பட்டுள்ள வட்டார ஊராட்சி சேவை மையத்தின் கட்டுமானப்பணி ஆகியவற்றை பார்வையிட்டு கலெக்டர் ஆய்வு செய்தார்.

பின்னர், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உ.அம்மாபட்டி ஊராட்சியில் தேசிய சத்துணவுத் திட்டத்தின் கீழ் ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டடப்பட்டு வரும் சமையல் அறை கட்டிடப்பணி , தமிழ்நாடு கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 69 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் உ.அம்மாபட்டி- கோம்பை சாலை பலப்படுத்தும் பணி ஆகிய பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார். அப்போது , பணிகளை தரமாகவும் , துரிதமாகவும் முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மாலதி , உதவி செயற்பொறியாளர் வெங்கடேஷ் , வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோவிந்தராஜ், கருப்பசாமி, சேதுகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

**பூத்துக்குலுங்கும் செவ்வந்தி பூக்கள் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை**



சின்னாளபட்டி பகுதிகளில் செவ்வந்தி பூக்கள் பூத்து குலுங்குகின்றன. போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பூக்கள் சாகுபடி

பூக்கள் உற்பத்தியில் 'ஹாலந்து' என்றழைக்கப்படும் திண்டுக்கல் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பூ சாகுபடி செய்கின்றனர். குறிப்பாக செவ்வந்தி பூ சாகுபடி செய்வது கடந்த காலங்களில் அதிகளவு இருந்தது. கார்த்திகை மாதம் தொடங்கும் செவ்வந்திபூக்கள் அறுவடை பணிகள் பொங்கல் வரை நீடிக்கும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிலோ செவ்வந்திபூக்கள் அதிகபட்சமாக ரூ. 120 வரை விற்பனை ஆனது.

இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்தது. இதையடுத்து செவ்வந்தி பூக்கள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டத்தொடங்கினர். இந்தநிலையில் தற்போது சின்னாளபட்டி , காந்திகிராமம் அண்ணாநகர் , அம்மையநாயக்கனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தோட்டங்களில் செவ்வந்தி பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த தோட்டங்களில் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. ஆனால் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து சாமியார்பட்டியை சேர்ந்த பூ விவசாயி ஒருவர் கூறுகையில் , திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஒரு விவசாய தோட்டத்தில் குறைந்தது 2 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை செவ்வந்தி பூக்கள் சாகுபடியில் தான் விவசாயிகள் ஈடுபட்டனர். கார்த்திகை மாதம் அய்யப்ப பக்தர்கள் இந்த பூக்களை வாங்கிச்செல்வார்கள். அதன் பின்னர் தொடர்ந்து பண்டிகை காலம் என்பதால் செவ்வந்தி பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

வண்ண செவ்வந்தி

பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் செவ்வந்தி பூக்களை திண்டுக்கல் , நிலக்கோட்டை பூ மார்க்கெட்டுகளில் நேரடியாக கொண்டு சென்று விற்பனை செய்கிறோம். மேலும் ரெயில் , லாரிகள் மூலம் சென்னை , தென்காசி, கும்பகோணம், புதுச்சேரி, பெங்களூரு போன்ற பகுதிகளுக்கு அதிகளவு அனுப்பி விற்பனை செய்தோம்.

ஆனால் கடந்த 8 ஆண்டுகளாக பெங்களூரு , தர்மபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் பல்வேறு வண்ண செவ்வந்தி பூக்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பூக்கள் பார்க்க அழகாக தெரிவதால் பொதுமக்கள் விரும்பி வாங்குகின்றனர். இந்த பூக்கள் திண்டுக்கல் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

நஷ்டம்

இதன்காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் செவ்வந்தி பூக்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இதனால் எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் பருவமழையும் கடந்த சில ஆண்டுகளாக முறையாக பெய்யவில்லை. இதனால் ஆழ்துளை கிணறுகள் மூலம் கிடைக்கும் தண்ணீரை கொண்டு தான் பூக்கள் சாகுபடியில் ஈடுபட்டு வருகிறோம்.

இதையடுத்து கூடுதல் விலை கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் ரூ. 120 வரை விற்பனையான ஒரு கிலோ செவ்வந்தி பூக்கள் தற்போது ரூ. 20 முதல் ரூ.30 வரையே மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் உற்பத்தி செலவை கூட எங்களால் ஈடுசெய்ய முடியவில்லை’ என்றார்.

தினமணி

**சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மானியம்: ஜன.2-இல் சிறப்பு முகாம்**



தருமபுரி மாவட்டத்தில், சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழக்கும் சிறப்பு முகாம் வரும் ஜன.2-ஆம் தேதி தொடங்க உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி: தருமபுரி மாவட்டத்தில், தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை மூலம் எட்டு வட்டாரங்களில் குறைந்த நீரில் அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய உதவும் நுண்ணீர்ப்பாசனத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்துக்கு 2016-17-ஆம் ஆண்டு சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்த 3421.67 ஹெக்டேர் பரப்புக்கு இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, 1240.40 ஹெக்டர் பரப்புக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இத் திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் சிறப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு முகாமுக்கு வருகைதரும் விவசாயிகள், மூன்று புகைப்படங்கள், சிட்டா, அடங்கல் நிலவரைப்படம், குத்தகை ஒப்பந்தப் பத்திரம் (குறைந்தது 10 ஆண்டுகள்),

குடும்ப அட்டை நகல், சிறு விவசாயி சான்று, மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை சான்று ஆகியவற்றுடன் கலந்துகொள்ள வேண்டும்.

இந்த முகாமானது, ஜன.2-ஆம் தேதி பாப்பிரெட்டிப்பட்டி, நல்லம்பள்ளி, ஜன.3-ஆம் தேதி மொரப்பூர், அரூர், 4-ஆம் தேதி தருமபுரி, காரிமங்கலம், 5-ஆம் தேதி பாலக்கோடு, பென்னாகரம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளன. எனவே, விவசாயிகள் உரிய ஆவணங்களோடு, முகாமில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**"ரசாயன கலப்படமற்ற உணவுகளை உட்கொள்ள மாடித்தோட்டம் சிறந்தது'**



தற்போதைய காலக்கட்டத்தில் ரசாயன கலப்படமற்ற உணவுகளை உட்கொள்ள வேண்டுமானால் மாடித்தோட்டம் சிறந்தது என்றார் அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் ஏகாம்பரம்.

பெரம்பலூர் புறநகர்ப் பகுதியான துறைமங்கலத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டம் சார்பில் நகர்ப்புற மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மாடித்தோட்டம் மற்றும் காலியிடங்களில் தோட்டம் அமைப்பது தொடர்பான செயல்விளக்க பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமில், தோட்டம் அமைப்பது குறித்து செயல் விளக்கம் அளித்த

அவர் மேலும் பேசியது: ரசாயனக் கலப்படமற்ற உணவினை உட்கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் தற்போது மக்களிடையே அதிகரித்துள்ளது. இயற்கை காய்கறிகளை உண்ண மாடித்தோட்டம் அல்லது வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டும். வீட்டு மொட்டை மாடியிலும், வீட்டின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் இடமிருந்தால் போதுமானது. வீட்டிற்குத் தேவையான காய்கறிகள், கீரைகளை சாகுபடி செய்து கொள்ளலாம்.

மாடித் தோட்டம் அமைக்க : மண் நிரப்புவதற்கான தொட்டிகள் அல்லது சாக்குப் பைகள் அல்லது பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தலாம். கீரை வகைகளுக்கு 1.5 அடி ஆழத்துக்கு மேல் மண் இருந்தால் போதுமானது. செடி வகைகளுக்கு 1 அடி ஆழமும்,கொடி வகைகளுக்கு 3 அடிக்கு மேலும் இருக்க வேண்டும். மண் போடும்போது, அதோடு சம அளவு இயற்கையாக மட்கும் குப்பைகள் சேர்க்க வேண்டும். குப்பைகளையும், மண்ணையும் நன்கு கலந்து பைகளில் இட வேண்டும். மண் இடும்போது சிறிது, நாட்டுப் பசுவின் சாணம் கிடைத்தால் சேர்த்துக்கொள்ளலாம். பிறகு,தேவையான காய்கறி விதைகளை சேகரித்து அல்லது கடைகளில் வாங்கி பைகளில் ஊன்றி வைத்தால் போதுமானது. தங்களது குடும்பத்துக்குத் தேவையான இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட காய்கறிகளை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றார் ஏகாம்பரம்.

தொடர்ந்து, காலியிடத்தில் கீரை வகைகளான சிலோன் பசலி, மிளகு தக்காளி, தண்டுக்கீரை, அரைக்கீரை, வல்லாரை, மேட்டுப்பாத்தி, இருமடிப்பு பாத்தி, அமைத்து வெண்டை, கொத்தவரை, பீன்ஸ், முல்லங்கி விதை நடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி முகாமில், அட்மா திட்ட பயிற்சி மைய வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம், இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் பட்டதாரி இளைஞர்கள் ஆ. கார்த்தி, கலை பிரேமா உள்பட 50-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கல்யாண சுந்தரம் செய்திருந்தார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**கரும்புக்கான ஆதார விலையை ரூ.4,000ஆக உயர்த்தி வழங்க வேண்டும்: வைகோ, ஜி.கே.வாசன் வலியுறுத்தல்**

கரும்புக்கான ஆதார விலையாக டன் ஒன்றுக்கு ரூ.4,000-ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் வே.துரைமாணிக்கம் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக நேற்று அவர்கள் தனித்தனியே வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

**வைகோ:**

2016-17 நடப்பு கரும்பு பருவத்திற்குக் கரும்பு கொள்முதல் விலையை கடந்த ஆண்டு விலையிலேயே தமிழக அரசு நிர்ணயித்திருப்பது கரும்பு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித் துள்ளது. பருவமழை பொய்த்தது, நிலத் தடி நீர் குறைந்தது, இடுபொருள்கள் விலை உயர்வு, விவசாயத்திற்கான ஆட்கள் பற்றாக்குறை போன்றவற்றால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆனாலும், கரும்பு விவசாயிகள், தொடரும் வேதனைகளை எதிர்கொண்டு கரும்பு உற்பத்தி செய்து வருகின்றனர்.

எனவே, தமிழக அரசு பொங்கல் பண்டிகைக்குள் கரும்பு விவசாயிக ளுக்குச் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ள கொள் முதல் விலையை மாற்றி அமைத்து, டன் ஒன்றுக்கு ரூ.4000-ஆக நிர்ணயம் செய்து கரும்பு உற்பத்தியில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியைத் தடுக்க வேண்டும்.

**ஜி.கே.வாசன்:**


கரும்புக்கு ஆதார விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2,850 வழங்கு வதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது போதுமானதல்ல. எனவே, தமிழக அரசு கரும்பு விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை கவனத்தில் கொண்டு டன் ஒன்றுக்கு ரூ.4,000 ஆதார விலையாக உயர்த்தி தர வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். எனவே, தமிழக அரசு கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

மத்திய அரசு கரும்புக்கான ஆதாரவிலை யாக டன் ஒன்றுக்கு ரூ.2,300 என அறி வித்துள்ளது. மாநில அரசு பரிந்துரை விலையாக வாகன வாடகையையும் சேர்த்து ரூ.550 அறிவித்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் வே.துரைமாணிக்கம்:

கடந்த ஆண்டு அறிவித்த விலையே இந்த ஆண்டும் அறிவித்திருப்பது விவசாயி களையும், கரும்பு உற்பத்தியையும் பாது காக்க உதவிகரமாக இருக்காது. எனவே, கரும்புக்கான விலையை டன் ஒன்றுக்கு ரூ.4,000 என்று உயர்த்தி வழங்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துகிறோம்.

**பருவமழை பொய்த்ததால் வறட்சி: தமிழகத்தில் 24 மாவட்டங்களில் விவசாயம் பாதிப்பு; வேளாண் பல்கலை., ஆய்வில் தகவல்**



▲ ஆய்வின் அடிப்படையில் வறட்சி பாதிப்பு குறித்து தயாரிக்கப்பட்டுள்ள வரைபடம் (பசுமை குறைந்து காணப்படும் அதிக பாதிப்புள்ள மாவட்டங்கள்)

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால் 24 மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டு விவசாயம் பாதித்துள்ளது, வேளாண் பல்கலைக்கழக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கோவையில் உள்ள வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு மற்றும் தொழில்நுட்பத் துறையில் செயற்கைக்கோள் தொழில்நுட்ப உதவியுடன் வேளாண்மை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில், பயிர், பயிர் பரப்பு, பயிரின் நிலை உள்ளிட்டவற்றின் நிலை குறித்து அறிந்து விவசாயிகளுக்கும், அரசுக்கும் தகவல்கள், பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவுக்கு வடகிழக்கு பருவமழை பெய்யாததால், அதன் பாதிப்பு குறித்து இத்துறையினர் ஆய்வு நடத்தினர். அதில், தமிழகத்தில் பருவமழை, நிலத்தடி நீர், காவிரி நீர் ஆகிய நீராதாரங்கள் போதிய அளவுக்கு கிடைக்காததால் 24 மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அதாவது சராசரி மழையளவைவிட 60 சதவீதம் குறைந்த மழையளவே கிடைத்துள்ளதாகவும், இதனால் பல மாவட்டங்கள் விவசாயம் பாதித்துள்ளதாகவும் ஆய்வை மேற்கொண்ட துறையினர் தெரிவிக்கின்றனர்.

**அரசுக்கு பரிந்துரை**

அதிகாரிகள் கூறும்போது, ‘கோவை, சேலம், ஈரோடு, தருமபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் எப்போதும் குறைந்த மழையே கிடைக்கும். இந்த ஆண்டு அதைவிடவும் மேற்கு மாவட்டங்களில் மழை குறைந்துள்ளது. சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களில், நெல், மானாவரிப் பயிர்கள் வறட்சியால் பாதித்துள்ளன. டெல்டா மாவட்டங்களான திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகியவற்றில் நீர் குறைவு, மழை குறைவு காரணமாக நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய வடமாவட்டங்களில் மானாவாரிப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் பருத்தி, மக்காச்சோளம், மானாவாரிப் பயிர்கள், நெல் ஆகியவை பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. நிலத்தடி நீர் உள்ள இடங்களில் ஓரளவுக்கு பாதிப்பு குறைவாக உள்ளது. இது தொடர்பான ஆய்வு முடிவுகளை அரசுக்கு பரிந்துரைகளாக அனுப்பி உள்ளோம்’ என்றனர்.

இந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.